நாள்.24.07.2025

**அசல் வழக்கு எண். 24/2014**
**பெயர். ராசாத்தி**

**க.பெ. பச்சமுத்து**

**வா.சா.1– 7 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் வயது 60. என் அப்பா ரெங்கசாமிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 6 பேர். 2 பெண்கள்,4 ஆண்கள். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 பேர். பெரியதம்பி, பெரியநாயகி. என் பெரியப்பாவின் பெயர் பெரியதம்பி இல்லை பெரியான் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்தவரை பெயரிதம்பிதான். என் தம்பி சூரியமூர்த்திக்குதான் பெரியதம்பியா பெரியானா என்று தெரியும் என்றால் எனக்கும் தெரியும். என் பெரியப்பாவின் பெயர் பெரியதம்பி தான் என்று நிருபிக்க ஆவணம் உள்ளதா என்றால் என் தம்பி சூரியமூர்த்தியைதான் கேட்க வேண்டும். என் பெரியப்பாவை பெரியான் என்று ஊரில் யாரும் சொல்வார்களா என்றால் இல்லை. எனக்கு தெரிந்தவரை பெயரியதம்பி தான். என் அப்பாவுடன் பிறந்த சகோதரி பெரியநாயகி இறந்துவிட்டார். எந்த வருடம் என்றால் 35 ஆண்டுகளுக்கு முன்பு. பெரியநாயகிக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. பெரியநாயகிக்கு வாரிசு உண்டா என்றால் ஒரு மகன். கோதையன் கோனார். சூரியமூர்த்தி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகபிரிவினைக்காக. மொத்தம் எவ்வளவு சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 24 செண்டு. வழக்கு சொத்தில் கோதையன் 6 1/2 செண்டு கிரையம் வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. என் வழக்கில் சொல்லப்பட்டுள்ள என் பெரியப்பா பெரியதம்பி கோனாருக்கு வாரிசுகள் இல்லை என்றால் ஆமாம்.நாங்கள் தான் வாரிசு. என் வழக்கில் சொல்லப்பட்டுள்ள என் பெரியப்பா பெரியதம்பி கோனாருக்கு பெரியநாயகியும், அவருடைய மகன் கோதையனும் வாரிசாக வருவார்கள் என்றால் இல்லை. பெரியநாயகி இறந்து ரொம்ப காலம் ஆகிவிட்டது. வழக்கில் கோதையனை தரப்பினராக என் சகோதரர் சேர்த்துள்ளாரா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் நானும், வளர்மதியும் பாகம் வேண்டாம் என்று சூரியமூர்த்தி வழக்கில் சொல்லியுள்ளார் நான் எப்போது சொன்னேன் என்றால் எனக்கு திருமணம் ஆகி போன தேதியிலிருந்து எனக்கு சொத்து வேண்டாம் என்று சொல்கிறேன்.

என் அத்தை பெரியநாயகி குடும்ப சொத்தில் பாகம் வேண்டாம் என்று யாரிடம் சொன்னார் என்றால் சூரியமூர்த்தியிடம். சூரியமூர்த்திக்கு என்ன வயது இருக்கும் என்றால் 58 இருக்கும். பெரியநாயகி இறந்தபோது

சூரியமூர்த்திக்கு என்ன வயது இருக்கும் என்றால் 20 வயது இருக்கும். பெரியநாயகி திருமணம் நடந்து எத்தனை வருடம் கழித்து இறந்தார் என்றால் பெரியநாயகிக்கு திருமணம் நடந்து 3 வருடம் கழித்துதான் என் அப்பாவிற்கு திருமணம் நடந்தது. பெரியநாயகியும் திருமணம் செய்தபிறகுதான் சொத்து வேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்றால் ஆமாம். வழக்கு சூரியமூர்த்தியால் சொல்லப்பட்ட விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். வழக்கு ச.எண் தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை அயிட்டத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் A,B. Aயில் எத்தனை அயிட்டம் என்றால் 2. Bயில் எத்தனை அயிட்டம் என்றால் 1. A யில் 1வது மற்றும் 2வது அயிட்டத்தில் எத்தனை செண்டு என்றால் 12 மற்றும் 12 செண்டுகள். முதல் அயிட்டம் 12 செண்டு பூர்வீக சொத்து என்றால் ஆமாம். முதல் அயிட்ட சொத்து 12 செண்டு ஆதியில் யாருக்கு சொந்தம் என்றால் பொட்டுகோனார், ரெங்க கோனாருக்கு சொந்தம். A யில் 2வது அயிட்டம் எங்கள் பூர்வீக சொத்து இல்லை என்றால் பூர்வீக சொத்துதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.